padippakam



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

16

## யாழ்ப்பாண சமூகத்தை புரிந்துகொள்வது பற்றி...

பிரித்தானிய காலனிய அரசுக்கெதிரான தமிழர்களுடைய போராட்ட வரலாற்றை சொல்கின்றபோது ஆறுமுகநாவலரில் ஆரம்பித்து சேர்.பொன். இராமநாதனில் கொண்டுவந்து முடித்து அவர்கள் இருவரையும் சிறந்த நாட்டுப் பற்றாளர்களாகவும், தேசியத்தலைவர்களாகவும் காட்டுகின்ற மரபு இன்று வரை யாழ்ப்பாண மேட்டுக்குடிப் பிரிவினரிடையே இருந்து வருகிறது.

ஆனால் உண்மையில் இந்த இருவரும் ஒரு போதும் பிரித்தானிய எதிர்ப்பாளர்களாக இருந்ததில்லை.

'ஆறுமுகநாவலர் பிரித்தானிய ஆட்சியை ஏற்றுக் கொண்டவர். அவருடைய நோக்கமெல்லாம் ஆங்கிலக்கல்வி காரணமாக சைவ சமயப்பாரம்பரியத்திலிருந்து யாழ்ப்பாண மக்கள் வழுவி விடக்கூடாது என்பது தான்.... (கா.சிவத்தம்பி 1979)

பிரித்தானிய அரசு கொண்டு வந்த சமூக அரசியல் மாற்றங்கள், இந்த நோக்கத்துக்கு இடையூறு செய்யாத போது அவர் அவற்றைத் தயக்கமின்றி ஏற்றுக் கொண்டார்.

ஆறுமுகநாவலருடைய 'சைவப் பாரம்பரியம் என்பது சாதியப் பாரம்பரியமே அன்றி' தேசிய இனப் பாரம்பரியம் கிடையாது. நாவலர் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் சாதி அமைப்பு வலுப் பெற வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டவர்.

யாழ்ப்பாண சமூக அமைப்பைப் பொறுத்தவரை, தமிழகத்திலுள்ளது போன்ற பிராமண மேலாண்மை அங்கில்லை. சடங்காசாரமாக நோக்கும் போது, பிராமணர்கள், - சைவக் குருமார்கள் முதலிலே வைத்துப் பேசப்படும் மரபு உண்டெனினும் உண்மையான சமூக அதிகாரம் சைவ வேளாளர்களிடமே உண்டு. இந்த 'வெள்ளாள மனப்பான்மை' காரணமாக இன்னொரு கருத்து நிலையும் வளர்ந்துள்ளது. வருணாச்சிரம அடிப்படையில் வெள்ளாளர்களும் சூத்திரர்களே. இந்த இக்கட்டு நிலையில் இருந்து விடுபடுவதற்காக சூத்திரர்களை இரு வகையாக பிரித்து நோக்கும் முறை ஒன்று உருவாக்கப்பட்டது.

சற் சூத்திரர், அசற் சூத்திரர் - என்பதே அதுவாகும். இதில் சூத்திரர்கள் உயர்ந்தவர்கள். அசற் சூத்திரர்கள் இழிந்தவர்கள். சற் சூத்திரர்களின் மேலாண்மையை உறுதி செய்வதற்காக வர்ணாச்சிரமக் கோட்பாட்டிலேயே சொல்லப்படாத ஐந்தாவது வர்ணத்தை பஞ்சமர் பற்றி அழுத்தமாக யாழ்ப்பாண சமூக அமைப்பிலே வலியுறுத்தப்பட்டது. இதை வலியுறுத்தச் சொன்னவரும் - செய்தவரும் ஆறுமுக நாவலரேயாவார்.

அடுத்து சேர். பொன்னம்பலம் இராமநாதனைப் பொறுத்தவரை, ஆறுமுகநாவலருக்குப் பின் சைவமும் தமிழும் வளர்த்த பெருந்தகை என்று அவர் போற்றப்படுகின்றார்.

நாவலரைப்போலவே அவரும் பிரித்தானிய அரசை எதிர்த்தது கிடையாது. பிரித்தானிய அரசு கபடத்தனமாக தனது ஆட்சி அதிகார நலனுக்காக தமிழீழ தேசத்தின் இறைமையை 'சிலோன்' என்ற ஒற்றையாட்சிச் சிறைக்குள் அடைத்தபோது - அதற்கு எதிராக போராடியது கிடையாது. குரல் கொடுத்ததும் கிடையாது.

சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதாக சொல்லிக்கொண்டு சாதி அமைப்பை காப்பாற்ற போராடியதுதான் அவரது மிகப் பெரிய சமூகப் பணியாக இருந்தது.

டொனமூர் ஆணைக்குழு இலங்கையிலுள்ள வயது வந்த அனைவருக்கும் சர்வசனவாக்குரிமை வழங்க முன்வந்த போது, வெள்ளாளரல்லாத சாதியினருக்கும், பெண்களுக்கும் வாக்குரிமை வழங்குவது தவறானது. அது கும்பலாட்சிக்கு (Mob - Rule) வழிவகுத்து விடும் என்று பிரித்தானிய அரசிடம் வாதிட்டவர் இராமநாதன்.

> இராமநாதன், உயர்சாதியினர் தரப்பில் எந்தத் தவறுமில்லை. பஞ்சமர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட சாதிக்கட்டுப்பாடுகளை மீற முற்பட்டால் அதை தடுக்கும் உரிமை உயர் சாதியினருக்குண்டு. தேச வழமைச் சட்டப்படி அந்த மரண ஊர்வலத்தை அவர்கள் தடுத்தது சரியானதே என்று வாதிட்டதோடு மரபுகளை சிதைக்கும் விதத்தில் நீதி மன்றத் தீர்ப்புகள் அமையக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார்.

1920-க்கும் 30-க்கும் இடைப்பட்ட காலத்தில் 'இந்துபோட்' இராஜரட்ணம் - ஹென்ரி-பேரின்பநாயகம் ஆகியோரது முயற்சிகளால் குறிப்பாக யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசினது பிரச்சார நடவடிக்கைகளால் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள, அரச மற்றும் கிறிஸ்தவ மிசனறிப் பாடசாலைகளில், ★சாதி வேறுபாடில்லாமல் சகல பிள்ளைகளும் சம ஆசனம், சம பந்திபோசனம் வழங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1930-ம் ஆண்டு 'வெள்ளாளரல்லாத மாணவர்களுக்கு வெள்ளாள மாணவர்களுடன் சேர்த்து ஒரே பந்தியில் இருத்தி உணவு வழங்குவது சமூக அந்தஸ்தை சீர் குலைக்கும் நடவடிக்கை' என்று இராமநாதன் பிரித்தானிய தேசாதிபதியை சந்தித்து முறையிட்டார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தேச வழமைச் சட்டப்படி 'பஞ்சமர்கள்' தமது இறுதி ஊர்வலத்தில் உயர்சாதியினரைப்போல பறைமேளம் முதலான வாத்தியங்களை ஒலித்துக்கொண்டு பிணத்தை பொது வீதிகளால் எடுத்துச் செல்வது தடுக்கப்பட்டிருந்தது. ஆனால் 'பஞ்சமர்' சாதியைச் சேர்ந்த ஒருவர் தனது மனைவியினுடைய பிணத்தை - பறைமேளம் அடித்தல், நிலப் பாவாடை விரித்தல், நவதானியம் விதைத்தல் முதலான சடங்குகளுடன் ஊர்வலமாக எடுத்துச் சென்று எரிக்க முற்பட்ட போது பெரிய கலவரம் மூண்டது. கத்தி, வாள் முதலானவற்றை பாவித்து இறுதி ஊர்வலம் நடத்தியவர்களை உயர் சாதியினர் தாக்கி விட்டனர். இந்த விவகாரம் நீதி மன்றத்துக்குச்சென்றபோது, 'இறந்துபோன ஒருவருடைய இறப்பால் துக்கப்பட்டுக் கொண்டிருப்பவர்களை ஆயுதங்களை பாவித்துத் தாக்குவது மனிதாபிமான மற்றதும் ஏற்றும் கொள்ள முடியாததுமான செயல்' என்று கூறி கலவரம் விளைவித்த உயர் சாதியினருக்கு தண்டனை வழங்கப்பட்டது. இதை - எதிர்த்த உயர் சாதியினர், மேன்முறையீடு செய்தபோது அவர்களுக்காக வாதாட முன் வந்த இராமநாதன், உயர்சாதியினர் தரப்பில் எந்தத் தவறுமில்லை. பஞ்சமர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட சாதிக்கட்டுப்பாடுகளை மீற முற்பட்டால் அதை தடுக்கும் உரிமை உயர் சாதியினருக்குண்டு. தேச வழமைச் சட்டப்படி அந்த மரண ஊர்வலத்தை அவர்கள் தடுத்தது சரியானதே என்று வாதிட்டதோடு மரபுகளை சிதைக்கும் விதத்தில் நீதி மன்றத் தீர்ப்புகள் அமையக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார்.

(இராணி எதிர் அம்பலவாணர் வழக்கு)

ஈழத்தமிழர்களுடைய அரசியல் வரலாற்றை சொல்கிற போது 'சைவத்தின்' வரலாற்றையும் சேர்த்துக் கொள்ளும் மரபு இன்று வரைக்கும் உள்ளது. சைவமும் தமிழும் பிரிக்க முடியாதவை. சைவமும் தமிழும் தமிழினத்தின் இரண்டு கண்கள் போன்றவை என்கிற கருத்துப் போக்குகள் இன்றும் மேலாண்மை செலுத்திய வண்ணம்தான் உள்ளன.

ஆதி சைவத்தின் மூலவேர் தமிழ் பழங்குடியினரிடம் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வர்ணாச்சிரம சிமிளுக்குள் அடைத்து சாதிய முலாம் பூசப்பட்ட இன்றைய சைவம், ஆரியர்களுக்குரியது. இந்த ஆரிய சைவம் தமிழர்களை ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் ஒன்றுபடவிடாது சாதிரீதியாக பிளவுபடுத்தி அவர்களை நாடற்றவர்களாக ஆக்கிய பெருமைக்குரியது.

சைவப்பாரம்பரியம் தான் தமிழ் பாரம்பரியம் என்று சொல்கின்றபோது - தமிழர்கள் எல்லோரையும் ஒருங்கிணைக்கின்ற தன்மை அதற்கு இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் இலங்கையிலும் சரி, தமிழ் நாட்டிலும் சரி இந்தச் சைவப் பாரம்பரியம் என்பது உலகெங்கிலுமுள்ள மொத்தத் தமிழர் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமான மக்களை 'சாதி' ரீதியாக பிரித்து வைக்கின்ற - ஒதுக்கிவைக்கின்ற - ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ளு வைக்கின்ற பாரம்பரியமாக இருந்து வந்திருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரை சைவமும், தமிழும், என்ற கோட்பாட்டை உருவாக்கியவர் ஆறுமுகநாவலர். அவருக்குப் பின் அதை வளர்த்தெடுத்தவர்களில் முக்கியமானவர் சேர். பொன் இராமநாதன்.

இவர்களுடைய கருத்தின் படி தமிழன் என்றால் அவன் சைவ சமயத்தவனாக இருக்க வேண்டும். சைவ சமயத்தவனாக இருந்தால் சற்சூத்திரனாகவும், அசற் சூத்திரனாகவும் இருக்க வேண்டும். குல மரபுகளை மீறக் கூடாது. குலம் தொழிலை விட்டு வேறு தொழில் செய்யக் கூடாது. இவற்றை எதிர்ப்பவர்கள் தமிழை எதிர்ப்பவர்கள்.

'யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக் கொள்ளல்' என்ற தனது நூலிலே பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் இந்த சைவ - தமிழ் இணைப்புப் பற்றி விரிவாக ஆராய்ந்திருக்கிறார்.

'சைவமும் தமிழும் என்ற கருத்து நிலை யாழ்ப்பாணத்து மக்களின் அன்றாட மத வாழ்க்கையில் காணப்படும் சாஸ்திர அங்கீகாரமற்ற (பார்ப்பனிய முறை அல்லாத) குளிர்த்தி மடை போன்றவற்றை மறுதலிப்பதாகவே உள்ளது. இக்கருத்து நிலை சைவ சித்தாந்தத்தையே தமிழர் வாழ்க்கையின் மெய்யியல் தளமாகக் கொள்கிறது...'

'தமிழரிடையே பிற மத பண்பாட்டுத் தாக்கங்கள் முன்னர் வந்த வேளையிலும் இத்தகைய சைவத் தமிழ் இணைப்பு பேசப்பட்டது உண்மையாகும்.

திருஞானசம்பந்தரிலும், அருணகிரிநாதரிலும் இந்தக் கருதுகோளைக் காணலாம். ஆனால் யாழ்ப்பாணத்து நிலையில் இது உருவாக்கம் பெற்று வியாக்கியானம் செய்யப்படும் பொழுது, இது ஒரு புறத்தில் பிராமணர்களின் இந்து மத மேலாண்மை நிலையை மறுதலிப்பதாகவும் (சைவக்குருமாருக்கு முக்கியத்துவம்) மறுபுறத்தில் சைவவேளாள மேலாண்மையை நியாயப்படுத்துவதாகவும் அமைகிறது. சற்சூத்திரக்கோட்பாடு இதனடிப்படையிலேயே வருகிறது. மேலும் 'சைவ சித்தாந்தம்', படிநிலைப்பட்ட அமைப்பினை ஏற்றுக் கொள்வதாகும். அது தனது சரியை, கிரியை, ஞானம், யோகம் என்னும் கோட்பாடுகள் மூலம் ஆன்மாக்களின் முதிர்ச்சி நிலையில் வேறுபாடு காண்பது மாத்திரமல்லாமல், முக்தி நிலையில் கூட இந்தப் படிநிலையை வற்புறுத்தும் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என முக்தி நிலையையே அது - வகைப்படுத்தும். அதாவது, இந்த உலகத்தில் மாத்திரமல்லாது அடுத்த உலகத்திலும் அது சமத்துவத்தை மறுதலிக்கிறது'.

'சைவமும் தமிழும் கோட்பாட்டின் சக அரசியல் உட்கிடக்கைகள் மிக மிக முக்கியமானவையாகும். மொழி வழிப் பண்பாடு வற்புறுத்தும் தமிழ் ஒருமையை இது மறுதலிக்கிறது'.

★குடாநாட்டிலுள்ள அனைத்து அரச பாடசாலைகளிலும் கிறிஸ்தவ மிசனறிப்பாடசாலைகளிலும் சகல பிள்ளைகளையும் சாதி வேறுபாடின்றி சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகளுக்கு மற்றைய பிள்ளைகளுக்கு உள்ளது போல சம ஆசனம், சமபோசனம் [அதாவது மதிய உணவு, மற்றும் பால் என்பவற்றை வேறுபாடு காட்டாது சமத்துவமாக வழங்குவது என்பவற்றை வழங்குமாறும் பிரித்தானிய காலணிய அரசு உத்தரவிட்டிருந்தது. ஆனால், குடாநாட்டிலிருந்த அநேகமான பாடசாலைகளில் மேட்டுக் குடியினரே ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும் இருந்ததால் சட்டத்துக்கு புறம்பான வகையில் அவர்களுக்கு சமத்துவம் மறுக்கப்பட்டது. வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமத்தின் சில பகுதிகளின் 1770 வரை இந்த நிலை தொடர்ந்தது.

**- நக்கீரன்**

படிப்பகம்